### அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. விடுத்த கோரிக்கையேற்று – அன்னியூரில் உள்ள அரசுக் கல்லூரி

# ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்’ எனப் பெயர் மாற்றம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப்.21-**

**உயர்கல்வி - கல்லூரிக் கல்வி 2025 - 26 ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட “அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி”, அன்னியூர், விழுப்புரம் மாவட்டம் என்ற பெயரினை “முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.**

இதுதொடர்பான அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பகுதியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை துவங்க அனுமதித்து ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட கல்லூரிக்கான கட்டடம் கட்ட அன்னியூரில் நிலம் தெரிவு செய்யப்பட்ட நிலையில், அக்கல்லூரியின் பெயரை “அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அன்னியூர்” எனத் திருத்தம் செய்து ஆணையிடப்பட்டது.

இந்நிலையில், விக்கிரவாண்டி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா 9.9.2025 நாளிட்ட மனுவில் மேற்கூறிய கல்லூரியின் பெயரினை “முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்” என மாற்றம் செய்து ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று பின் வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

### திருத்தம்

அரசாணை (நிலை) எண். 137, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள் 27.6.2025-ல் குறிப்பிடப்பட்டுள்ள “அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அன்னியூர், விழுப்புரம் மாவட்டம்” என்ற பெயரினை “முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்,” விழுப்புரம் மாவட்டம் என படிக்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பொ.சங்கர், பிறப்பித்துள்ள அரசாணையில் குறிப்பிட்டார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செங்கல்பட்டில் நடைபெற்ற ”ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழகப் பொருளாளர் கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரண்டு இருந்த கழகத்தினர் அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

### உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கோரிக்கை... புதிய குழாய்கள் அமைப்பு!

# மாதவரம், தீயம்பாக்கம், காந்திநகர் பொதுமக்கள் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்!

## புழல் எம், நாராயணன் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர்!

மாதவரம், செப்.21-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 17 வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழக தலைவர் அவர்களின் சீரிய திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பு திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் சமுதாய கூடத்தில் நடைபெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் சுமார் 43 துறைகள் சம்பந்தமான கோரிக்கைகளை மனுக்களாக கொடுத்து பயன்பெறலாம் என்று திராவிட மாடல் அரசு அறிவித்ததன் பலனாக, சுமார் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இரண்டாவது கட்டமாக நடந்த முகாமில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்களை அளித்தனர்.

ஒவ்வொரு துறைக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனுக்களை பெற்று உடனடி தீர்வுக்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டனர்.

அந்த வகையில் மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் தீயம்பாக்கம் காந்திநகர் பகுதியில் உள்ள மூன்றாவது தெருவில் கடந்த காலங்களில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு சரிவர நீர் வராமல் பயன்பாட்டில் இல்லாமல் போய்விட்டது.எனவே மீண்டும் காந்திநகர் மூன்றாவது தெருவில் புதிய குழாய்கள் அமைக்க வேண்டும் என்று பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் பொதுமக்கள் கொடுத்த மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மண்டலம் 2 மணலி பகுதி செயற்பொறியாளர் திருமதி பிரதீபா அவர்கள் உடனடியாக உதவிப் பொறியாளர் மற்றும் ஊழியர்களை காந்திநகர் மூன்றாவது தெருவிற்கு அனுப்பி ஆய்வு செய்து, ஜேசிபி இயந்திரம் மூலம் பள்ளம் வெட்டி மெயின் லைனில் இருந்து காந்திநகர் மூன்றாவது தெருவுக்கு பைப் லைன் அமைத்து இரண்டு குழாய்களை அமைத்து இரவோடு இரவாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர்.

மேற்படி இந்த குழாய்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் காந்திநகர் கிராமப் பெரியோர்கள் மற்றும் பொதுமக்களே பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

இந்நிகழ்வில் வட்ட செயலாளர் கே. கருணாகரன், பகுதி பிரதிநிதிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, வி. பார்த்தசாரதி, முன்னாள் காந்திநகர் கிளைச் செயலாளர் டி. சுந்தரம், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ்.சிவக்குமார், டி வினோத்,டி. ராஜ்குமார், பகுதி ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர் எஸ். நாகராஜ், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பாக முகவர்கள் டி.திவாகர், வி. சுமிர், ஜி.கார்த்திக், எம். மைக்கேல், காந்திநகர் எஸ். வாசு, தீயம்பாக்கம் எம்., ஜி. பூபாலன், இ.சுதர்சன், சந்தோஷ், பி. செந்தில், இ. கார்த்திக் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

தாங்கள் பல ஆண்டுகளாக போராடி உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மனு கொடுத்து இரண்டு நாட்களில் தங்கள் பகுதிக்கு குடிநீரை வரவழைத்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் காந்திநகர் பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

அதேபோல உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மனுவை பெற்றவுடன் துரித நடவடிக்கையில் இறங்கி குடிநீரை வரவழைத்த சென்னை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் பொது மக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாதவரம் சட்டமன்ற தொகுதி 17வது வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் தீயம்பாக்கம் காந்திநகர் பகுதிக்கு குடிநீர் குழாய்கள் வேண்டும் என்று பொதுமக்கள் மனு கொடுத்து பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட சென்னை குடிநீர் வடிகால் வாரிய மணலி மண்டல பகுதி பொறியாளர் திருமதி. பிரதீபா அவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் துணையுடன் புதிய குடிநீர் குழாய்களை பைப் லைன் மூலம் அமைத்து கொடுத்து சீரான குடிநீர் வழங்கப்பட்டது.

மேற்படி குழாய்களை பொதுமக்களே பயன்பாட்டிற்கு கொண்டு வந்த போது மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்ட செயலாளர் கே. கருணாகரன், சி. பாலாஜி, கே. சண்முகப்பிரியன்,சி. மூர்த்தி, காந்திநகர் சுந்தரம், எஸ். வாசு மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

